# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 ஏப்ரல் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

### பொருள் எண்–01

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் மற்று□ குடி□□□னி 2017-2018-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 12.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய கட்டண கழிவறை பின்புறம் முதல் கழிவு மண் சேகரமாகும் தொட்டி வரையில் மழைநீர் வடிகால் கட்டுதல் | ரூ. 9,40,000/- | M/s. ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.01 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | 3.70 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | பேருந்து நிலைய கிழக்குப்புறம் இலவச கழிவறை முதல் பழைய நகராட்சி அலுவலகம் செல்லும் சாலை வரையில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் பேருந்து நிலைய கிணற்றின் மேல்பகுதி சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | ரூ. 9,80,000/- | M/s. ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.18 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | 2.14 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | பேருந்து நிலைய கட்டண கழிவறைக்கு கூடுதல் வசதிகள் மற்றும் மேற்குபுறம் பேருந்துகள் நிற்கும் மேடை அமைத்தல் | ரூ. 9,80,000/- | M/s. ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.18 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | 2.14 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | பேருந்து நிலைய பாலூட்டும் தாய்மார்கள் அறைக்கு அருகில் கடைகள் கட்டுதல் மற்றும் மேல்தளம் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 3,50,000/- | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.06 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.17 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | நகராட்சி அலுவலகத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு நிழற்கூடம் (Shed) அமைத்தல் | ரூ. 3,50,000/- | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.31 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 1.19 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | வார்டு எண். 04 க.மாமனந்தல் சாலை வாய்க்கல் மேட்டுத் தெரு பகுதிக்கு ராஜா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ. 95,000/- | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.38 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.70 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7. | நகராட்சி பேருந்து நிலையத்தில் LED மின் விளக்குகள் அமைத்தல் | ரூ. 4,00,000/- | M/s. வீ லைட், ஆத்தூர் | 0.18 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ், கள்ளக்குறிச்சி | 4.92 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8. | நகராட்சி அலுவலகத்தினை மராமத்து பணிகள் செய்தல் | ரூ. 8,50,000/- | திரு. T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | 0.10 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. R.G. & Co., கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.70 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9. | ராஜாநகர் திரையரங்கம் பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 05) | ரூ. 8,00,000/- | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.03 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.41 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 10. | திருவரங்கம் நகர் குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 10) | ரூ. 5,00,000/- | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.06 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.13 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 330 / 2018 / இ1)**

## பொருள் எண்–02

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 305/2எ, 305/2பில் அமைந்துள்ள அனுமதியற்ற திருமலை நகர் மனைப்பிரிவில் உள்ள 52 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 127/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–03

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 109/1,3, 6,7,8,9,10,11எ, 11பி, 12,13,14,15, 111/1எ1 பகுதி, 1டி1எ பகுதி–யில் அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீசப்தகிரி நகர் மனைப்பிரிவில் உள்ள 31 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.மவ/ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 170/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 552/3 ல் அமைந்துள்ள அனுமதியற்ற மணிமேகலை நகர் மனைப்பிரிவில் உள்ள 10 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.மவ/ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 201/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–05

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 77/2எ2எ பகுதி, 77/2எ3பி–யில் அமைந்துள்ள அனுமதியற்ற வெற்றிவேல் நகர் மனைப்பிரிவில் உள்ள 99 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.மவ/ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 144/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 77/2எ1எ1, 83/1, 83/3, 84/1எ, 84/2எ1 மற்றும் 86/1–யில் அமைந்துள்ள அனுமதியற்ற ஆர்.ஜே.எஸ் நகர் மனைப்பிரிவில் உள்ள 119 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.மவ/ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 130/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–07

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 16/1,2,3,6,7,8 பகுதி, 10 பகுதி–யில் அமைந்துள்ள அனுமதியற்ற ஜீவமணி நகர் மனைப்பிரிவில் உள்ள 47 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.மவ/ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 165/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண்–08

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு குத்தகை இனமான, **தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறை கட்டணம் வசூலிக்கும்** உரிமத்திற்கான குத்தகை உரிமத்தை அனுபவித்து கொள்ள, 27.02.2018-ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், திரு. டி.சுரேஷ் த/பெ துரை, கள்ளக்குறிச்சி என்பவர் ஓராண்டிற்கான குத்தகை தொகையை ரூ 3,10,000/-க்கு ஏலம் கோரியுள்ளதை, தீர்மானம் எண். 208/2018 நாள். 28.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 311/2017/அ2 நாள். 05.03.2108 மற்றும் 19.03.2018ன் மூலம் முழுத் தொகையினையும் செலுத்திட குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் 11.04.2018ல் நகராட்சி அலுவலக கரூவூலக பற்றுச் சீட்டு எண். 042/KL1/17-18/0000312-ல் ரூ. 1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்தியுள்ளார். மேலும், குத்தகைதாரர் குத்தகையினத்திற்கான குத்தகை தொகையானது அதிகபட்ச தொகையாக இருப்பதால், முழு தொகையையும் செலுத்திட வழிவகை இயலாத நிலையில் உள்ளதால், மீதமுள்ள தொகை ரூ. 1,60,000/-ஐ இரண்டு மாத காலத்திற்குள் (30.05.2018-க்குள்) செலுத்திவிடுவதாக கடிதம் கொடுத்துள்ளார். மேலும், குத்தகை உரிமத்தினை மறு ஏலம் கோரிடவும், மறு ஏலம் கோரும்பட்சத்தில் இவ்வளவு அதிக தொகைக்கு ஏலம் போகுமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளதாலும், குத்தகை கோரிய நபர்ரூ.1,50,000/–யை செலுத்தி விட்டதாலும் மீத தொகையினை 2 மாத காலத்திற்குள் (31.05.2018-க்குள்) செலுத்தி விடுவதாகவும், தொகை செலுத்தாதபட்சத்தில் நகராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு கட்டுப்படுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்காணும் நபருக்கு ஏலத்தினை உறுதி செய்து உத்தரவு வழங்கலாம். மேலும், உத்தரவில் 2 மாத காலத்திற்குள் மீதி தொகையினை செலுத்தவும் அறிவுறுத்தலாம். தவறும்பட்சத்தில் குத்தகை விதிகளின்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, அவரது வைப்புத்தொகை மற்றும் கட்டிய தொகையினை பறிமுதல் (Forfeit) செய்து மறு ஏலம் கோரிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு

வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குத்தகையினத்தின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குத்தகை உரிமத்தினை உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ2)**

## பொருள் எண்–09

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடியில் செயல்பட்டுவரும் அம்மா உணவகத்தில், சமையலறையில் பயன்படுத்தப்பட்டு வரும் நீராவி கொதிகலன் (Stream Boiler) அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு, சமைப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாலும், மேலும் அம்மா உணவகத்தில் பொது மக்களுக்கு உணவு பரிமாறும் உபகரணங்கள் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் உணவு விநியோகம் செய்யப்படுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, மேற்படி அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள நீராவி கொதிகலனை (Stream Boiler) புதியதாக மாற்றுவதற்கும், சமையலறைக்கு தேவையான உபகரணக்ங்ள் புதியதாக வாங்கி கொள்வதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பு தொகை ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

2.அம்மா உணவகத்திற்கு வரும் பொது மக்களுக்கு உரிய நேரத்தில் உணவு வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

3.தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 775/2018/இ1)

## பொருள் எண்–10

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை தரம்பிரித்து நுண்ணுயிரி உரம் தயார் செய்வதற்கு, சிறிய அளவிலான நுண்ணுயிரி உரக்களம் அமைக்க, நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 12 இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் சிறிய அளவிலான நுண்ணுயிரி உரக்களம் அமைத்து, குப்பைகளை தரம் பிரித்து உரம் தயாரிக்க செய்யப்படுவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 774/2018/இ1

## பொருள் எண்–11

மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் கடித எண் 22/செ.ம.தொ/2018 நாள் 13.02.2018ன்படி மாண்புமிகு த மிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு தமிழக அரசு ஓராண்டு நிறைவு பெற்றதை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வழியே விளம்பரம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வரப்பெற்றது அதன் விபரம்

| வ. எண் | பிரசுரம் செய்யப்பட்ட நாளிதழ் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மாலை தமிழகம் | MT 0444/2018-19/ 01.04.2018 | 16800 |
| 2. | மக்கள் குரல் | MAB070807603 / 27.03.2018 | 10500 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை உரிய நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்—12

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்ட்ம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம்பிரித்து மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதியிலேயே உரமாக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 12.03.2018ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பபை வார்டுவாரியாக வீடுவீடாக சென்று சேகரிக்கும் மக்கும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதிகளிலேயே உரமாக்கும் பணி மேற்கொள்ளவும், தினசரி மார்க்கட் பகுதியில் உருவாகும் காய்கறி கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கில் உள்ள தரைதளத்தில் உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள குப்பைகள் மக்கக்கூடிய திரம் (Effective Micro Organism) E.M.SOLUTION கொள்முதல் செய்யவும், இந்த E.M. திரவத்தை செயலாக்கம் செய்யப்பட்ட திரவமாக மாற்ற தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று E.M.SOLUTION கொள்முதல் செய்ய திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும், இதர பொருட்கள் கொள்முதல் செய்ய விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த பண்டகச்சாலை விழுப்புரம் கள்ளக்குறிச்சி கிளை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொருட்கள் பெறப்பட்டு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.கஎண் 792/2018/அ4

## பொருள் எண்—13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள கணினி பிரிவில் உள்ள ஏஊ பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்யவும், அனைத்து பிரிவுகளிலிம் உள்ள கணினிகளில் Network CWAS என்ற மென்பொருள் இணைய தள வசதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் Network அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், Network வேகம் குறைந்து உள்ளதாலும் புதியதாக ஒரு Modem ஒன்று வாங்கி கொள்ளவும், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான பட்டியல் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/707/2018

## பொருள் எண்–14

அரசாணை எண் 97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.07.2007ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் பொதுமக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு கட்டணங்கள் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடியும் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்து அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் 2010–11 முதல் ஒவ்வொரு நிதியாண்டிற்கு 5% வைப்பு தொகை, சாலை பராமரிப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் மற்றும் குடிநீர் இணைப்பு கட்டணங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட விபரம்

2018–19 குடிநீர் குழாய் இணைப்பு கட்டணம்

| வ. எண் | நகராட்சியின் சாலையின் விபரம் | மண் / கருங்கல்/ ஜல்லி சாலை | தார் சாலை | சிமெண் ட் சாலை |
|---|---|---|---|---|
| 1 | சாலையின் நீளம் | | | |
| அ) | 0–30 மீ நீளம் | 4450 | 4450 | 4450 |
| ஆ) | 30 முதல் 90 மீ நீளம் | 4450 | 4450 | 4450 |
| 2 | சாலை பராமரிப்பு கட்டணம் | | | |
| அ) | 0–30 மீ நீளம் | 1700 | 3600 | 4100 |
| ஆ) | 30 மீ – 90 மீ நீளம் | 2650 | 4550 | 5050 |
| 3 | மேற்பார்வை கட்டணம் | | | |
| அ) | 0–30 மீ | 1350 | 1550 | 1650 |
| ஆ) | 30 – 90 மீ நீளம் | 2850 | 3000 | 3100 |
| 4 | குடிநீர் குழாய் இணைப்பு கட்டணம் | 250 | 250 | 250 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்படி 2017–18ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் / 2018/ இ1

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**